நூதன முறையில் மூதாட்டியிடம் ரூ.5 லட்சம் நகை திருட்டு

செஞ்சி, மார்ச் 12–

மூதாட்டியை நூதன முறையில் ஏமாற்றி ரூ.5 லட்சம் மதிப்புள்ள நகைகளை திருடி சென்ற நபரை போலீசார் தேடி வருகின்றனர்.

செஞ்சி பெரியகரம் பகுதியை சேர்ந்தவர் காமாட்சி, 70; இவர், கடந்த 10ம் தேதி மாலை 6:30 மணியளவில் வீட்டில் தனியாக இருந்தார். அப்போது அவரது வீட்டிற்கு வந்த தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு பகுதியை சேர்ந்த விக்னேஷ் கண்ணன், 47; என்பவர், தங்கள் குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவர் என அறிமுகப்படுத்திக்கொண்டு, மூதாட்டி காமாட்சியிடம் பேச்சு கொடுத்தார்.

அப்போது, ஆசி பெறுவதை போல் நடித்து, வீட்டு பானையில் இருந்த ரூ.5 லட்சம் மதிப்புள்ள 6 சவரன் தங்க நகை, 500 ரூபாய் பணம் ஆகியவற்றை திருடி சென்றுள்ளார்.

இது குறித்த புகாரின் பேரில் செஞ்சி போலீசார் வழக்கு பதிந்து விக்னேஷ் கண்ணனை தேடி வருகின்றனர்.

பங்க் கடை மாயம் போலீசார் விசாரணை

கடலுார், மார்ச் 12–

கடலுாரில் தனது பங்க் கடையை காணவில்லை என, போலீசில் பெண் புகார் அளித்துள்ளார்.

கடலுார் அடுத்த ஏ.வடுகபாளையத்தை சேர்ந்தவர் தேவி, 39; கடலுார் நெல்லிக்குப்பம் சாலையில் செம்மண்டலம் பகுதியில் பங்க் கடை வைத்திருந்தார். கடையை சரிவர திறக்கவில்லை. கடந்த ஜனவரி மாதம் கடை இருந்ததை கடைசியாக பார்த்துள்ளார். நேற்று கடை வைத்திருந்த இடத்தில் பாரத்தபோது, கடையை காணவில்லை.

இதனால் அதிர்ச்சி அடைந்த தேவி, இதுகுறித்து, கடலுார் புதுநகர் போலீசில் புகார் அளித்தார். போலீசார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

கஞ்சா விற்பனை 7 பேர் கைது

சிதம்பரம், மார்ச் 12–

சிதம்பரத்தில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 7 பேரை போலீசார் கைது செய்தனர்.

சிதம்பரம், நடராஜர் கார்டன் அருகில் உள்ள ஈத்கா மைதானம் பகுதியில், நேற்று நகர போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அப்பகுதியில் சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்றிருந்த சில இளைஞர்களை பிடித்து விசாரணை மேற்கொண்டனர். அப்போது, அவர்கள் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டது தெரியவந்தது.

தொடர்ந்து சிதம்பரம், கலைஞர் காலனியை சேர்ந்த செந்தில்வேலன் மகன் விஷ்வா,27; சிதம்பரம் லேபர் குவாட்டர்ஸ் பகுதியை சேர்ந்த பாபு மகன் முரளிவிஜய்,30; சிதம்பரம் அடுத்துள்ள சித்தாலப்பாடியை சேர்ந்த மணிகண்டன் மகன் மாதேஷ், 24; கே.ஆடுர் கிராமத்தை சேர்ந்த பன்னீர்செல்வம் மகன் செல்வம், 22; சிதம்பரம், அனந்தீஸ்வரர் கோவில் தெருவை சேர்ந்த மணி மகன் தேவமூர்த்தி, 26; வீரசோழகன் பகுதியை சேர்ந்த ராஜா மகன் ரகு, 18; பழையநல்லுாரை சேர்ந்த செல்வகுமார் மகன் ஜெயசீலன்,21; ஆகிய 7 பேரை போலீசார் கைது செய்து, அவர்களிடம் இருந்து, 400 கிராம் கஞ்ச பொட்டலங்களை பறிமுதல் செய்தனர்.

டீக்கடைக்காரர் மீது பெட்ரோல் ஊற்றி எரித்த முதியவர் கைது

கண்டாச்சிபுரம், மார்ச் 12–

கண்டாச்சிபுரம் அருகே கடனுக்கு டீ தர மறுத்த டீக்கடைக்காரர் மீது பெட்ரோல் ஊற்றி எரிக்க முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் அடுத்த ஒதியத்துார் கிராமத்தை சேர்ந்தவர் இத்ரீஸ்அலி,42; கீழ்வாலை கிராமத்தில் டீக்கடை நடத்தி வருகிறார். இவரது கடைக்கு நேற்று காலை வந்த குளிர்சுனை கிராமத்தை சேர்ந்த அப்துல் பாரி, 62; என்பவர், காசு கொடுக்காமல் டீ கேட்டுள்ளார். இத்ரீஸ்அலி டீ கொடுக்க மறுத்ததால் ஆத்திரமடைந்த அப்துல் பாரி. இத்ரீஸ்அலி மீது பெட்ரோலை ஊற்றி தீ வைத்துள்ளார். மேலும் அவரின் இருசக்கர வாகனத்தின் மீதும் பெட்ரோலை ஊற்றி கொளுத்தினார்.

அருகில் இருந்தவர்கள் இத்ரீஸ்அலியை காப்பாற்றி, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

தகவலறிந்த கண்டாச்சிபுரம் போலீசார் அப்துல் பாரியை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

டைட்டல் பார்க் அமைக்க ராகு காலத்தில் அடிக்கல்

நாகையில் ஆன்மிகவாதிகள் முகம் சுளிப்பு

நாகப்பட்டினம், மார்ச் 12–

நாகையில், புதிதாக மினி டைட்டல் பார்க் கட்டுமானப் பணிக்கு, ராகு கால நேரத்தில் அடிக்கல் நாட்டியது, ஆன்மிகவாதிகளிடையே சலசலப்பை ஏற்படுத்தியது.

பின்தங்கிய நாகை மாவட்டத்தில் தொழிற்சாலைகள் ஏதும் இல்லாத நிலையில், பட்டதாரி இளைஞர்கள் வேலை தேடி வெளி மாவட்டங்களுக்கு செல்கின்றனர். இதை கருத்தில் கொண்டு, தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியை மேம்படுத்தும் விதமாக, தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், வணிக செயலாக்க நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள், ஒரே இடத்தில் அமைய மினி டைட்டல் பார்க் அமைக்கப்படும் என கடந்தாண்டு தமிழக அரசு அறிவித்தது.

இதனால் படித்த 600 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும், பொருளாதார வளர்ச்சி மேம்படும் என எதிர்பார்ப்பு எழுந்தது.

இதற்காக நாகை, காடம்பாடியில், 43.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 61 ஆயிரம் சதுரடி பரப்பளவில் மூன்று தளங்கள் கொண்டு டைட்டல் பார்க் அமைக்க கட்டுமான பணிகளுக்கு நேற்று, காணொளி காட்சி மூலம் முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். நாகையில் நடந்த நிகழ்ச்சியில் டி.ஆர்.ஓ., பவனந்தி, தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் கவுதமன் பங்கேற்று குத்துவிளக்கேற்றினர்.

நேற்று அஷ்டமி என்பதோடு ராகு காலம் நேரத்தில் மதியம் 12.54 மணிக்கு, முதல்வர் ஸ்டாலின் பட்டனை அழுத்தி அடிக்கல் நாட்டிய பின், டி.ஆர்.ஒ.,மற்றும் முக்கிய பிரமுகர்கள் 12.57 மணிக்கு குத்துவிளக்கேற்றியது ஆன்மிகவாதிகளிடையே சலசலப்பை ஏற்படுத்தியது.

லோன் தருவதாக ஏமாற்றி வாலிபரிடம் ரூ.7.08 லட்சம் மோசடி

விழுப்புரம், மார்ச் 12–

லோன் தருவதாக ஏமாற்றி, வாலிபரிடம் ரூ.7.08 லட்சம் மோசடி செய்த மர்ம நபரை, போலீசார் தேடி வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனுார் அடுத்த சொக்கனந்தல் கிராமத்தை சேர்ந்தவர் ரமேஷ், 24; டைல்ஸ் ஒட்டும் தொழிலாளி. இவரது மொபைல் எண்ணிற்கு கடந்த பிப்., 11ம் தேதி வாட்ஸ் ஆப் மூலம் மர்ம நபர் தொடர்பு கொண்டார்.

அப்போது, தனியார் நிதி நிறுவனத்தில் இருந்து பேசுவதாகவும் லோன் தருவதாக கூறி ஆதார் கார்டு, பான் கார்டு, வங்கி பாஸ்புக், போட்டோ கேட்டு வாங்கியுள்ளார்.

இதையடுத்து, லோன் தொகையை வங்கி கணக்கில் செலுத்த ஆவண செலவு, ஜி.எஸ்.டி., ஆகியவற்றிற்கு பணம் செலுத்துமாறு ரமேஷிடம், மர்ம நபர் கூறினார். இதையடுத்து, 71 தவணைகளாக 7 லட்சத்து 8 ஆயிரத்து 55 ரூபாயை மர்ம நபருக்கு, ரமேஷ் அனுப்பியுள்ளார். இதையடுத்தும், லோன் வழங்காததால் சந்தேகமடைந்த ரமேஷ், மர்ம நபரை தொடர்பு கொண்டபோது, தான் ஏமாற்றப்பட்ட விவரம் தெரியவந்தது.

இது குறித்த புகாரின் பேரில், விழுப்புரம் மாவட்ட சைபர் கிரைம் போலீசார் வழக்குப் பதிந்து மர்ம நபரை தேடி வருகின்றனர்.

வெப்பம் அதிகரிக்கும்

சென்னை, மார்ச் 12–

வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

அதன் காரணமாக, தென் மாவட்டங்களின் கடலோர பகுதிகளில், இன்றும், நாளையும் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகம், புதுச்சேரியில் இன்றும், நாளையும் வறண்ட வானிலை காணப்படும்.

தமிழகம், புதுச்சேரியில், இன்று முதல் நான்கு நாட்களுக்கு அதிகபட்ச வெப்ப நிலை இயல்பை விட, 2 டிகிரி செல்ஷியஸ் கூடுதலாக பதிவாக வாய்ப்புள்ளது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேன்மைமிகு உட்கோட்ட நிர்வாக
நடுவர்/சார் ஆட்சியர், திண்டிவனம்
பிறப்பு இறப்பு
சி.ப.வ.எண்.அ4/133/2025

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், வீரணாமூர் கிராமத்தில் வசித்து வரும் தேவகுமார் மகன் மணிகண்டன்
–மனுதாரர்

பொது அறிவிப்பு

மனுதாரர் மணிகண்டன் என்கிற நான் எனது தாத்தா கண்ணக் கவுண்டர் என்பவர் விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், வீரணாமூர் கிராமத்தில் கடந்த 20.03.1991ம் தேதி அன்று இறந்தார் என்பதை கவனக்குறைவாக பதிவு செய்ய தவறிவிட்டேன். தற்போது எனது தாத்தா கண்ணக் கவுண்டர் இறப்பு சான்று, பட்டா மாற்றம், பத்திரப்பதிவு, வாரிசு சான்று பெற தேவைப்படுவதால், எனது தாத்தா கண்ணக் கவுண்டர் இறப்பு சான்று வேண்டி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் இந்நீதிமன்றத்தில் எழுத்து மூலமாகவோ, நேரில் ஆஜராகியோ தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் இம்மனுவில் ஆட்சேபனை ஏதும் இல்லையென பாவித்து ஒருதலை பட்சமாக தீர்மானித்து உத்தரவாகிவிடும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர்
D.மணிகண்டன் த/பெ தேவகுமார்,
மேட்டுத்தெரு, வீரணாமூர், செஞ்சி Tk.,
விழுப்புரம் Dt.,

முதன்மை சார்பு நீதிமன்றம்,
விருத்தாசலம்.
ஓ.எஸ்.417/2025

1.அபிநயா, 2. அனுசுயா, 3. விஷ்ணு குமார், 4. மதிவதனி, அனைவரும் கிழக்கு தெரு, கோ.மாவிடந்தல் கிராமம், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்.
– மனுதாரர்கள் / வாதிகள்

எதிர்

1. தேவேந்திரன், 2. ஆறுமுகம், அனைவரும் கிழக்கு தெரு, கோ.மாவிடந்தல் கிராமம், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்.
– எதிர்மனுதாரர்கள்/ 7,8 எதிர்வாதிகள்

விளம்பரம்

மேற்படி வாதிகள் நீதிமன்றத்தில் 7,8, பிரதிவாதிகள் ஆகிய தங்கள் பேரிலும் மற்ற எதிர்வாதிகள் பேரிலும், பாக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கின் விசாரணை 02.04.2026 ல் வைக்கப்பட்டுள்ளதால் மேற்படி வாதி தாக்கல் செய்துள்ள வழக்கின் பேரில் தங்களுக்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் தாங்களோ அல்லது தங்களின் வழக்கறிஞர் மூலமோ நீதிமன்றத்தில் 02.04.2026 அன்று காலை 10.30 மணி அளவில் ஆஜராக வேண்டும் என இதன் மூலம் கேட்டுக்கொள்ளப் படுகிறது. தவறும் பட்சத்தில் 7,8 பிரதிவாதிகளாகிய தங்கள் பேரில் ஒரு தலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் கண்டிப்பாய் அறியவும்.

பா.சிவாஜி சிங், பி.ஏ., பி.எல்.,
வழக்குரைஞர், விருத்தாசலம்.

புற்றுநோய் குறித்த அச்சம் குறைந்துள்ளது மக்கள் நல்வாழ்வு துறை செயலர் தகவல்

சென்னை, மார்ச் 12–

''புற்றுநோய் குறித்து, மக்களிடம் முன்பு பெரும் அச்சம் இருந்தது. அடையார் புற்றுநோய் மருத்துவமனை மற்றும் தமிழக அரசின் முயற்சியால், தற்போது அச்சம் குறைந்துள்ளது,'' என, தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை செயலர் செந்தில் குமார் தெரிவித்தார்.

தமிழக புற்றுநோய் பதிவேடு புள்ளிவிபரங்கள் அடங்கிய, *https://tncrest.cancerinstitutewia.in/* இணையதளம் துவக்க நிகழ்ச்சி, சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் நேற்று நடந்தது. இணையதளத்தை, செந்தில் குமார் துவக்கி வைத்து பேசியதாவது:

நாடு சுதந்திரம் பெற்றபோது, தொற்றுநோய் பெரும் சவாலாக இருந்தது. பின், கொரோனாதான் பெரும் தொற்று நோயாக இருந்தது. தமிழக அரசு சார்பில், புற்றுநோயை கண்டறிதல் மற்றும் அதற்கான தீர்வு போன்றவை கண்காணிக்கப்படுகிறது.

மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக, பல்வேறு நோய்களை கண்டறியக் கூடியவைகளாக சேர்த்துள்ளோம். அந்த வகையில், அனைத்து மாவட்டங்களிலும் புற்றுநோயை கண்டறிந்து, அந்த தரவுகளை சேகரித்துள்ளோம். எந்த பகுதியில் அதிக தாக்கம் உள்ளது என்ற தகவல்களை, பொதுமக்களும் தெரிந்து கொள்ளும் வகையில், இந்த இணையதளம் துவக்கப்பட்டு உள்ளது.

மக்களிடம், முன்பு புற்றுநோய் குறித்த பெரும் அச்சம் இருந்தது. அடையார் புற்றுநோய் மருத்துவமனை மற்றும் தமிழக அரசின் முயற்சியால் தற்போது அச்சம் குறைந்துள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

தேசிய சுகாதார இயக்கத்தின், தமிழக மிஷன் இயக்குனர் அருண் தம்புராஜ் பேசுகையில், ''புற்றுநோய் பாதிப்பு குறித்த தரவுகள் வாயிலாக, எதிர்காலத்தில் எந்த புற்றுநோய்க்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். எந்த பகுதிக்கு அதிக விழிப்புணர்வு மற்றும் சிகிச்சை தேவைப்படும் என்பதை தீர்மானிக்க முடியும்,'' என்றார்.

நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் ஊரக சுகாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குனர் ராஜ்மோகன், புற்றுநோய் நிறுவனத்தின் தலைமை நிர்வாக இயக்குனர் கல்பனா பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பொதுத்தேர்வில் 637 கைதிகள் பங்கேற்பு

சென்னை, மார்ச் 12–

''சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள், 637 பேர், 10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத் தேர்வு எழுதுகின்றனர்,'' என, சிறைத்துறை இயக்குநர் சங்கர் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:

நடப்பு கல்வி ஆண்டில், தமிழகத்தில் உள்ள ஒன்பது மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட சிறைகளில், 363 கைதிகள் 10ம் வகுப்பு, 274 கைதிகள் பிளஸ் 2 பொதுத் தேர்வு எழுதுகின்றனர். கடந்த கல்வி ஆண்டில், 10ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய, 236 கைதிகள், பிளஸ் 2 பொது தேர்வில், 130 கைதிகள் தேர்ச்சி பெற்றனர்.

தற்போது, 168 கைதிகள் இளநிலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளை படித்து வருகின்றனர். இவர்களில், 129 கைதிகள், தமிழக திறந்த நிலை பல்கலையிலும், 39 கைதிகள் இந்திரா காந்தி தேசிய திறந்த நிலை பல்கலையிலும் படித்து வருகின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சுகாதார ஆய்வாளர்கள் பணியிடம் நிரப்ப அரசுக்கு ஐகோர்ட் அனுமதி

சென்னை, மார்ச் 12–

சுகாதார ஆய்வாளர் நியமனம் தொடர்பான வழக்கில், 47 பணியிடங்கள் தவிர, மற்ற பணியிடங்களை நிரப்ப, தமிழக அரசுக்கு அனுமதியளித்து, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில், 1,400 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு தேர்வு நடத்தப்பட்டது. இதில், காந்திகிராம் கல்வி நிறுவனம், மதுரை காமராஜர் பல்கலையில், சுகாதார ஆய்வாளர் முதுகலை டிப்ளமா படித்திருந்த, 47 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

இதை எதிர்த்து, விண்ணப்பதாரர்கள் பார்த்திபன், இன்பகுமார் உள்ளிட்டோர் தாக்கல் செய்த வழக்கை, சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி விசாரித்தார். தகுதி பெற்ற இவர்களின் பெயரை, தற்காலிக தேர்வு பட்டியலில் சேர்த்து, பிற தகுதிகளை பூர்த்தி செய்தால், இட ஒதுக்கீட்டு முறையை பின்பற்றி, தேர்வு நடைமுறைகளை மேற்கொள்ள உத்தரவிட்டிருந்தார்.

இதை எதிர்த்து, தமிழக சுகாதாரத் துறை, மருத்துவ பணிகள் தேர்வு வாரியம் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. மனுவில், 'கல்வித் தகுதி சர்ச்சை வழக்கில் தொடர்புடைய, 47 மனுதாரர்களுக்கும், 47 பணியிடங்களை காலியாக வைத்திருக்க முடிவு செய்யப்பட்டு உள்ளதால், மீதமுள்ள பணியிடங்களை நிரப்ப அனுமதிக்க வேண்டும்' என, அரசு தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதை ஏற்ற நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், என்.செந்தில்குமார் அடங்கிய அமர்வு பிறப்பித்த உத்தரவு:

சுகாதார ஆய்வாளர்கள் நியமனத்தில், 47 பணியிடங்களை காலியாக வைத்து விட்டு, மீதமுள்ள பணியிடங்களை, 69 சதவீத இடஒதுக்கீட்டு முறையை பின்பற்றி நிரப்ப அனுமதி அளிக்கப்படுகிறது. காலியாக வைத்திருக்கப்படும் 47 பணியிடங்களையும், இந்த மேல்முறையீட்டு வழக்கின் முடிவின் அடிப்படையில் மட்டுமே நிரப்ப வேண்டும்.

இவ்வாறு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

தோகைமலை கோவிலில் முருகன் சிலை மாற்றம்: டிரஸ்டி, அறங்காவலர்கள் நீக்கம்

குளித்தலை, மார்ச் 12–

தோகைமலை முருகன் கோவிலில், சிலை மாற்றி வைத்தது தொடர்பாக டிரஸ்டி மற்றும் அறங்காவலர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கரூர் மாவட்டம், குளித்தலை அருகே தோகைமலை சுப்பிரமணிய சுவாமி கோவிலில், ஆண்டி கோலத்தில் முருகன் சிலை இருந்தது.

இந்த சிலையை, ஹிந்து சமய அறநிலையத்துறைக்கு தெரிவிக்காமல், டிரஸ்டி மற்றும் அர்ச்சகர்கள் மாற்றி, புதிதாக சிலை வைத்து கும்பாபிஷேகம் செய்தனர். சிலை மாற்றம் குறித்து, சமூக ஆர்வலர் சங்கிலி முருகன் என்பவர், மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

சிலையை மாற்றி அமைத்தவர்கள் மீது, போலீசார் வழக்குப்பதிவு செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்; பழைய சிலையை நிறுவ வேண்டும் என, உயர் நீதிமன்றம் சமீபத்தில் உத்தரவு பிறப்பித்தது.

இதையடுத்து, தோகைமலை சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு, புதிய தக்காராக செயல் அலுவலர் சந்திரசேகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது புகாரின் படி, சிலை மாற்றம் குறித்து தோகைமலை போலீசார் விசாரிக்கின்றனர். முருகன் சிலையை மாற்றி அமைத்தது குறித்து, டிரஸ்டி வீரப்பன் மற்றும் அறங்காவலர்கள் சித்ரா, கவிதா ஆகியோரை, கரூர் உதவி ஆணையர் கணபதி முருகன் நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார்.

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

கடலூர் கிளை

நெ.36, பாரதி சாலை, கடலூர் -607 001.
போன் : 04142-230314, Email: cuddal@bankofbaroda.com, Web : bankofbaroda.bank.in

(baanknet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்தித்தாள்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-Aயின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கி**யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **''எங்கு உள்ளதோ அப்படியே'' ''எப்படி உள்ளதோ அப்படியே'' மற்றும் '' என்ன இருக்கிறதோ அதே நிலையில்''** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

M/s. M. KRISHNA TIN WORKS & CASHEWS பிரதிநிதியான உரிமையாளர், திரு.மணிமாறன்,த/பெ.A.திருநாவுக்கரசு, நெ.678, மெயின் ரோடு, முத்துகிருஷ்ணாபுரம், எழுமேடு அஞ்சல், பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம். 607 104, மற்றும் திரு. மணிமாறன், த/பெ.A.திருநாவுக்கரசு, உரிமையாளர் M/s. M. KRISHNA TIN WORKS & CASHEWS நெ.678, மெயின் ரோடு, முத்துகிருஷ்ணாபுரம், எழுமேடு அஞ்சல், பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம். 607 104 மற்றும் திரு.A.திருநாவுக்கரசு, த/பெ. அருணாச்சலம், நெ.678, மெயின் ரோடு, முத்துகிருஷ்ணாபுரம், எழுமேடு அஞ்சல், பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம். 607 104

1. கடன் கணக்கு எண். **12220500012784** நிலுவை தொகை ரூ.**37,73,437.87/-** மேலும் 28.02.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.

28.02.2026 **அன்று மொத்த நிலுவை தொகை** ரூ.**37,73,437.87/-**

கடலூர் பதிவு மாவட்டம், பண்ருட்டி சார் பதிவு மாவட்டம், எழுமேடு மதுரா, முத்துகிருஷ்ணாபுரம் கிராமத்தில் புதிய நத்தம் சர்வே நெ.195/13-0.0450 சதுரமீட்டர் வீட்டு இடத்தின் அளவுகள் கிழக்கு–மேற்காக 22 ½ அடி, தெற்கு வடக்காக 110அடி மொத்த பரப்பளவு 2475 சதுர அடி. அல்லது 230 சதுர மீட்டரில் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடம் உட்பட. **நான்கு எல்லைகள்:** ஜெகதீசன் ரெட்டியார் சொந்தமான வீட்டிற்கு வடக்கு, மெயின் ரோட்டிற்கு தெற்கு, சீத்தா ரெட்டியார் சொந்தமான வீட்டிற்கு கிழக்கு, விருதம்பாளுக்கு சொந்தமான வீட்டிற்கு மேற்கு. இந்த சொத்தானதுதிரு.A. திருநாவுக்கரசு பெயரில் உள்ளது.

சுவாதீன நிலை : ஆக்கப்பூர்வமான

நிர்ணயிக்கப்பட்ட விலை	ரூ. 43,45,000/-	டேவணித் தொகை	ரூ. 4,34,500/-	ஏல உயர்வு தொகை	ரூ. 25,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் **20.04.2026** **அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்**

சொத்தினை பார்வையிடும் தேதி : 03.04.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 20.04.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.bankofbaroda.bank.in/e-auction** என்ற இணையதள இனைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கிகரிக்கப்பட்ட அதிகாரி செல் : 9481183507 & 9515024578 தொடர்புகொள்ளலாம்.

தேதி : 11.03.2026
இடம் : கடலூர்.

அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/
பேங்க் ஆஃப் பரோடா

விளக்கு நாச்சியார் சிலை மாயம் கோவில் அறங்காவலர் கைது

எருமப்பட்டி, மார்ச் 12–

தலைமலையில், விளக்கு நாச்சியார் சிலை மாயமான புகாரில், கோவில் பரம்பரை அறங்காவலரை, நேற்று போலீசார் கைது செய்தனர்.

நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டியில் பிரசித்தி பெற்ற சஞ்சீவிராய பெருமாள் கோவில் உள்ளது. கடல் மட்டத்திலிருந்து, 2,700 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இக்கோவிலுக்கு, மூன்று தலைமுறையாக ஒரே குடும்பத்தினர் பரம்பரை அறங்காவலராக இருக்கின்றனர்.

இந்த கோவில், 6ம் நுாற்றாண்டை சேர்ந்தது. வெங்கடாஜலபதி, ஸ்ரீதேவி, பூதேவி, மாகலட்சுமி தாயார், கிருஷ்ணர், ஆஞ்சநேயர், சீனிவாச பெருமாள், கருப்பண்ண சாமி, விளக்கு நாச்சியார் உட்பட பழமையான சிலைகள் உள்ளன.

இந்த சிலைகளை அறங்காவலர் வீட்டில் வைத்து பராமரித்து, விசேஷ நாட்களில் மட்டும் கோவிலுக்கு எடுத்து சென்று, வழிபாடு செய்து, மீண்டும் அடிவாரத்திற்கே கொண்டு வருவதை வழக்கமாக வைத்துள்ளனர்.

இந்நிலையில், கோவிலில் இருந்த ஐம்பொன்னாலான, 80 கிலோ எடையுள்ள, 4 அடி உயர விளக்கு நாச்சியார் சிலைக்கு பதிலாக, வேறு சிலை வைக்கப்பட்டுள்ளதாக, கடந்த, 2020 முதல் தலைமலை பக்தர்கள் புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து, சிலை கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார், பரம்பரை அறங்காவலர் நந்தகோபாலன், 70, புகார் கொடுத்த செல்வகுமார் மற்றும் கோவில் பூசாரிகளிடம் விசாரித்தனர்.

கடந்த, மார்ச் 9ல், நந்தகோபலை, சென்னைக்கு அழைத்து சென்று தீவிர விசாரணை நடத்தினர்.

அதில், கோவிலில் வைக்கப்பட்டுள்ள விளக்கு நாச்சியார் சிலை, பழைய சிலை இல்லை என்பதை உறுதி செய்தனர்.

இதையடுத்து சிலை மாயமானதில், நந்தகோபாலுக்கு தொடர்பு இருக்குமா என்ற கோணத்தில், நேற்று அவரை கைது செய்து, விசாரிக்கின்றனர்.

பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு வதந்தி பங்குகளில் அலைமோதிய கூட்டம்

விழுப்புரம், மார்ச் 12–

பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படும் என்ற வதந்தியால், மாவட்டத்தில் உள்ள பங்குகளில் வாகன ஓட்டிகளின் கூட்டம் அலைமோதியது.

ஈரான் – இஸ்ரேல் போர் காரணமாக இந்தியாவில் வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்றிரவு முதல் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படும் என தகவல் பரவியது. இதனால், விழுப்புரம் நகரம், சூரப்பட்டு, கெடார், அரியலுார் திருக்கை உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள பெட்ரோல் பங்குகளில் வாகன ஓட்டிகள் குவிந்தனர்.

வாகன ஓட்டிகள் தங்களின் இருசக்கர வாகனங்கள், கார்கள், டிராக்டர்கள், மினி சரக்கு வாகனங்களில் முண்டியடித்து கொண்டு பெட்ரோல், டீசலை நிரப்பினர். மேலும், தங்களுக்கு தேவையான பெட்ரோல், டீசலை கேன்களில் நிரப்பி சென்றனர்.

ஒரே நேரத்தில் நுாற்றுக்கணக்கான வாகன ஓட்டிகள் பங்குகளில் குவிந்ததால், பெட்ரோல் பங்க் ஊழியர்கள் திணறினர்.

அதேபோன்று கள்ளக்குறிச்சி அருகே பகண்டை கூட்ரோட்டில் உள்ள பெட்ரோல் பங்குகளில் 500க்கும் மேற்பட்டோர் திரண்டனர். அவர்களுக்கு ஒரே நேரத்தில் பெட்ரோல் நிரப்ப முடியாததால் பிரச்னை ஏற்பட்டது. அதையடுத்து, பெட்ரோல் இல்லை என கூறி, பெட்ரோல் பங்கை மூடினர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

மாஜி ஊராட்சி தலைவர் கொலையில் 3 பேர் கைது

காரியாபட்டி, மார்ச் 12–

காரியாபட்டி வரலொட்டி தி.மு.க., முன்னாள் ஊராட்சி தலைவர் திருப்பதி 55, கொலை வழக்கில் மூவரை போலீசார் கைது செய்தனர்.

திருப்பதி நேற்று முன்தினம் இரவு வில்லிப்பத்திரி அருகே டூவீலரில் சென்று கொண்டிருந்தார். அப்போதுவழிமறித்தமர்மநபர்கள், இவரை வெட்டிக் கொலை செய்தனர்.

இதையடுத்து கொலையாளிகளை கைது செய்ய வலியுறுத்தி திருப்பதியின் உறவினர்கள் விருதுநகர் அரசு மருத்துவமனை முன் ரோடு மறியலில் ஈடுபட்டனர். போலீசார் விசாரித்ததில் அதே ஊரைச் சேர்ந்த மணிகண்டன் 19, நண்பர்கள் மல்லாங்கிணர் ராஜா 20, இருளப்பன் 25, கொலை செய்தது தெரிந்தது.

மணிகண்டன் ஏற்கனவே ரவுடி லிஸ்டில் உள்ளார். திருப்பதியின் வீடு அருகே மணிகண்டனின் வீடு உள்ளது.

தனது அண்ணன் முத்துக்குமாருக்கு திருப்பதி செய்வினை வைத்ததாக கூறி மணிகண்டன் அடிக்கடி தகராறு செய்துள்ளார். மேலும் மணிகண்டனின் மாமா சரவணனுடன் திருப்பதிக்கு முன் விரோதம் இருந்துள்ளது.

இதை மனதில் வைத்து திருப்பதியை கொலை செய்ததாக மணிகண்டன் ஒப்புக்கொண்டார். இதையடுத்து மூவரையும் கைது செய்து மல்லாங்கிணர் போலீசார் விசாரிக்கின்றனர்.